DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET

**Sc No. 51/2018**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | P.W.1 |
| Name | : | ஆறுமுகம் |
| Father's / Husband's Name | : | முனிசாமி |
| Age | : | 47 |
| Religion | : | Hindu |
| Calling | : | Master in Furniture |
| Caste | : | BC |
| Village | : | Walajapet |
| Date | : | 02.12.2019 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் வாலாஜாப்பேட்டை காந்தி நகரில் குடியிருக்கிறேன். 26.10.2015 அன்றை தேதியில் என் பெரிய மகள் லாவண்யா என்பருக்கு திருமணம் ஏற்பாடு செய்திருந்தேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 24.10.2015 அன்று என் மகளுக்கு அன்று மாலை 4 மணி அளவில்லை நலங்கு விஷேசம் ஏற்பாடு செய்திருந்தேன். நிகழ்ச்சி முடிந்து உறவினர் அனைரும் வீட்டில் இருந்தனர். அதன் பிறகு வீட்டின் பின்புறமாக காரை நிறுத்திவிட்டு என் மகளை கடத்தி சென்றார்கள். அவர்கள் திருவண்ணாமலையை சேர்ந்த கார்த்தி, அவர் நண்பர் சிவா, அவர் அக்கா வீட்டுக்காரர் ஆகிய மூவரும் கடத்திக்கொண்டு போனார்கள். நீதிமன்றத்தில்

இடமிருந்து வலமாக முதலில் நிற்பவர் கார்த்தி என்று சாட்சி அடையாளம் காட்டினார். (அவர் தன் பெயரை கார்த்தி என்று கூறினார்). கார்த்திக்கு அடுத்து நிற்பவர் பெயர் தெரியாது அவர் கார்த்திக்கின் அக்கா கணவர் ஆவார். அந்த நபருக்கு அடுத்து நிற்பவர் சிவா என்று சாட்சி கூறுகிறார். (அவர் தன் பெயரை சிவா என்று கூறுகிறார்). சிவாவிற்கு அடுத்து நிற்பவர் பெயர் எனக்கு தெரியாது. கடத்திக்கொண்டு சென்ற காரின் எண்ணானது. KA 1734 இண்டிகா கார். இவ்வழக்கில் இறந்துப்போன சிவக்குமார் என் தம்பி. என் அக்கா மகன் கார்த்திகேயன்

அவர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் துரத்திக்கொண்டு போனார்கள். வாலாஜா பஸ் நிறுத்ததில் போக்குவரத்து இடையூறு ஏற்பட்டதாக என் அக்கா மகன் கார்த்திகேயன் சொன்னார். சென்னை ரோட்டை நோக்கி அந்த காரை கொண்டு சென்றார்கள் என்றும் இறந்துப்போன என் தம்பி காரின் பேனட்டில் உட்கார்ந்து வைப்பரை பிடித்துக்கொண்டு சென்றார் என்றும் விரட்டி சென்றவர்கள் தயாளான், குமார், என் தங்கை மகன் மணிகண்டன் ஆகியோர் போனார்கள் என்றும் கேள்விப்பட்டேன். என் தங்கை மகன் மணிகண்டன் எனக்கு போன் செய்து மாமா காரில் தொங்கிக்கொண்டு போகிறார் என்றும் ரோம்ப பயமாக இருக்கிறது என்றும் சொன்னார். பின்னர் நான் வேறு காரை எடுத்துக்கொண்டு வி.சி மோட்டூர் வந்து பைபாஸ் ரோட்டில் ஆற்காடு வழியாக வேலூருக்கு வேகமாக சென்றோம். விசாரம் பக்கத்தில் நான் போகும் போது மணிகண்டனுக்கு போன் செய்த போது மாமாவை கீழே தள்ளவிட்டதாக சொன்னார். மாமா மயக்கமாகி விட்டார் என்றும் சொன்னார். திரும்ப 5 நிமிடம் கழித்து மணிகண்டனுக்கு போன் செய்த போது மாமாவை இரத்தினகிரி மருத்துவமனை ஆம்புலன்ஸில் ஏற்றி வாலாஜா மருத்துவமனைக்கு போய்க்கொண்டிருப்பதாக சொன்னார். பின்பு நான் வாலாஜா மருத்தவமனைக்கு சென்றேன். என் தம்பி சிவக்குமார் வாலாஜா மருத்துவமனையில் இறந்துவிட்டதாக சொன்னார்கள். நான் வாலாஜா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகார். அ.சா.ஆ.1. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET

**Sc No. 51/2018**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | P.W.2 |
| Name | : | மணிகண்டன் |
| Father's / Husband's Name | : | வெங்கடேசன் |
| Age | : | 27 |
| Religion | : | Hindu |
| Calling | : | Accountant |
| Caste | : | BC |
| Village | : | Walajapet |
| Date | : | 02.12.2019 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் வாலாஜா டீச்சர் காலனியில் குடியிருக்கிறேன். இவ்வழக்கில் இறந்துப்போன சிவக்குமார் எனக்கு தாய் மாமன் ஆவார். அ.சா.1 ஆறுமுகம் என் தாய் மாமா ஆவார். எதிரிகளை எனக்கு தெரியும். என் அ.சா.1 ன் மகன் லாவாண்யாவை கடத்திக்கொண்டு போகும் போது பார்த்துள்ளேன். ஆஜர் எதிரிகளில் 3 எதிரிகளை தெரியும். நீதிமன்றத்தில் இடதுஓரம் நிறப்பவர் கார்த்தி ஆவார். அடுத்து நிறப்பவர் ரஞ்சித். ரஞ்சிதிற்கு அடுத்து நிற்பவர் அருண். அருணுக்கு அடுத்து நிறப்பவர் பெயர் எனக்கு தெரியாது. 26,10,2015 அன்று என் அண்ணன் தெய்வ சிகாமணிக்கு லாவாண்யாவிற்கும் திருணம் ஏற்பாடு ஆகியிருந்தது. 24.10.2015 ம் தேதி 3.30 மணிக்கு நான் வாலாஜா பேருந்து நிலைத்திற்கு போனேன். மாலை 4 மணியளவில் நான் சில்வா் கலா் இண்டிகா கே.ஏ.1734 அந்த வண்டியில் இவ்வழக்கில் இறந்துபோன சிவக்குமார், கார்த்திகேயன் என்பவருடன் இரு சக்கர வாகனத்தில் வந்தார். காரானது வளைந்து நெளிந்து போனாதல் என் அண்ணன் கார்த்திகேயன் கீழே விழுந்துவிட்டார். என் மாமா சிவக்குமார் பேனட் மீது உட்கார்ந்து கொண்ட வைப்பைரைபிடீத்துக்கொண்டார். காரானது சென்னையை நோக்கி சென்றது. நான் என்னுடைய 2 சக்கர வாகனத்தில் காரின் பின் சென்றேன். அவ்வாறு சென்னையை நோக்கி போகும் போது அம்மனந்தாங்கல் தாண்டி வலது புறமாக கார் திரும்பியது

அப்போது நானும் என் அண்ணன் கார்த்திகேயன் அவருடை 2 சக்கர வாகனத்திலும் அக்கம் பக்கம் கடை வைத்திருந்தவர்கள் துரத்திச்சென்றார்கள், அதன் பின்பு ஆற்காடு SSS கல்லூரியை தாண்டும் போது நெடுஞ்சாலை போலிசார் நிற்றார்கள். அவ்வாறு போகும் போது என் மாமாவை இறக்கிவிடுங்கள் என்று கத்திக்கொண்டே பின் சென்றேன். குறிப்பாக ரத்தினகிரி மேம்பாலம் அருகில் அப்போது காரின் வைப்பரை உடைத்து அந்த வைப்பரிலேயே கண்ணாடியை உடைக்க முற்பட்டப்போது கண்ணாடியில் துளை ஏறப்பட்டது. அதன் வழியாக கார் டிரைவரும் பக்கத்தில் உட்கார்ந்திருந்த 1ம் எதிரியின் மாமாவான எதிரி அருண் என் மாமா சிவக்குமாரை தள்ளிவிட்டார்கள். அவர் கீழே விழுந்த உடனேயே எங்களை பின் தொடர்ந்து 2 சக்கர வாகனத்தில் வந்தவர்கள் தங்களை மருத்துவர் என்று சொன்னார்கள். அவர்கள் என் மாமாவை பரிசோதித்துப்பார்த்து விட்டு இறந்துவிட்டார் என்று கூறினார். அதன் பிறகு இரத்தினகரி ஆம்புலன்ஸ் மூலமாக அங்கிருந்து வாலாஜா அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தார்கள். 5.45 மணியில் இருந்து 6.45 மணிக்கு தான் மருத்துவமனைக்கு அந்த ஆம்புலன்ஸ் வந்தது. அதன் பிறகு அ.சா.1 வாலாஜா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET

**Sc No. 51/2018**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | P.W.3 |
| Name | : | கார்த்திகேயன் |
| Father's / Husband's Name | : | மகாலிங்கம் |
| Age | : | 37 |
| Religion | : | Hindu |
| Calling | : | Bank Sector (IOB) |
| Caste | : | BC |
| Village | : | Thandarampattu |
| Date | : | 02.12.2019 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

**<u>முதல் விசாணை</u>**

நான் தண்ராம்பட்டு திருவண்ணாமலை மாவட்டத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 என் மாமா. அ.சா.2 என் சித்தி மகன் ஆவார். இவ்வழ்க்கில் இறந்து போன சிவக்குமார் என் மாமா. ஆஜர் எதிரிகளை தெரியும். முதல் எதிரியை தெரியும். மற்ற எதிரிகளை பார்த்திருக்கிறேன் பெயர் தெரியாது. 24.10.2015 ம் தேதி 4 மணியில் இருந்து 5 மணிக்கு எதிரிகளை வாலாஜா பஸ் ஸ்டாண்ட் ஜங்க்சனில் வைத்து பார்த்தேன். நானும் இறந்து போன என் மாமாவும் ஒன்றாக கிளம்பினோம். வாலாஜா ஜங்கசனில் கே.ஏ 1734 இண்டி காரினை நான் வண்டிய நிறுத்துவதற்கு முன்பாக என் மாமா சிவக்குமார் இறங்கி, என் மாமா சிவக்குமார் காரின் பேலன்ட் மீது ஏறிக்கொண்டார். டிராப்பிக் கிளியர் ஆன பின்பு அவர்கள் நேராக சென்னை நோக்கி அம்மனந்தாங்கிலில் வேலூர் நோக்கி திரும்பினார்கள். நான் தனியாக சென்றேன். என் தம்பி மணிகண்டன், காரை சேசிங்க செய்தக்கொண்டு சென்றார். நானும் மற்றவர்களும் சென்றோம். கடைசி வரை தம்பி மணிகண்டன் சென்றார். நான் மணிகண்டனை விசாரித்தப்போது மணிகண்டன் மாமா இறக்கி விடுங்கள் என்று கத்திக்கொண்டு சென்றார் என்றும், அவர்கள் இறக்கி விடவில்லை என்றும், இரத்தினகிரி அருகில் கண்ணாடியை உடைத்து கீழே தள்ளிவிட்டு போய்விட்டார்கள் என்றும் அதன் பிறகு இரத்தினகிரி

ஆம்புலன்ஸ் வந்து எடுத்துக்கொண்டு வாலாஜா மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும் சொன்னார். நான் இரு சக்கர வாகனத்தில் அவர்களை துரத்திச்சென்ற போது ஆற்காடு வழியாக போன போது எனக்கு போன் மூலம் மணிகண்டன் மூலம் தகவல் கிடைத்து பின்னர் நான் வாலாஜா அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு என் மாமா சிவக்குமார் இறந்துவிட்டதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET

**Sc No. 51/2018**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | P.W.4 |
| Name | : | ஜெயக்குமார் |
| Father's / Husband's Name | : | எஸ்.ராஜி |
| Age | : | 34 |
| Religion | : | இந்து |
| Calling | : | டிங்கரிங் ஒர்க் |
| Caste | : | வன்னியர் |
| Village | : | வாலாஜா |
| Date | : | 02.12.2019 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

முதல் விசாரணை

நான் இறந்துப்போன சிவக்குமாரின் வீட்டிற்கு பகத்தில் டிங்கரிங் சாப் வைத்திருக்கிறேன். 24.10.2015 அன்று நலங்கு வைக்கும் விஷேசத்திற்காக சிவக்குமாரின் வீட்டிற்கு சென்றிருந்தேன். மாலை 4.30 மணியளவில் இண்டிகா காரில் சிவக்குமாரின் மகள் லாவாண்யாவை ஏற்றிக்கொண்டு போனார்கள். நானும் தயாளன் என்பவரும் வாலாஜா பஸ்டேண்டை நோக்கி காரின் பின்னால் சென்றோம். சென்னை பஸ் நிறுத்திதிலும் இறந்த சிவக்குமார் காரின் முன் நின்றப்போது காரின் பேணட் பிடித்துக்கொண்டு வைபரை பிடித்தக்கொண்டு போனார். நாங்கள் போகும் போது வாலாசா பஸ் ஸ்டாண்ட் தாண்டி சென்னை நோக்கி சென்றதாக சொன்னார்கள். கடப்பந்தாங்கலில் இருந்து திரும்பி வேலூர் நோக்கி கார் சென்றது. நாங்கள் பின் தொடாந்து வந்தோம். ஆற்காடு கிரின் தண்டர் வரை சென்றோம். அதன் பிறகு எங்கே சென்றது என்று தெரியவில்லை. அதன் பிறகு மணி என்பவருக்கு போன் செய்தோம். மணி என்னிடம் இரத்தினகிரி பாலத்தின் மேல் மாமாவை இடித்து கீழே தள்ளவிட்டார்கள் என்றும் ஆம்புலன்சில் ஏற்றி அனுப்பி வைத்ததாகவும் சொன்னார். அதன் பின்பு நாங்கள் வாலாஜா அரசு மருத்துவமனைக்கு திரும்பி வந்துவிட்டோம். பின்னர் 5 நிமிடத்தில் இறந்துவிட்டதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

இல்லை

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET

**Sc No. 51/2018**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | P.W.5 |
| Name | : | தயாளான் |
| Father's / Husband's Name | : | ரங்கநாதன் |
| Age | : | 42 |
| Religion | : | HINDU |
| Calling | : | Machanic |
| Caste | : | Vanniar |
| Village | : | Walajapet |
| Date | : | 02.12.2019 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் வாலாஜாவில் இருந்து வருகிறேன். நான் டூவீலர் மெக்கானிக் கடை வைத்திக்கிறேன். அந்த கடை அ.சா.1 க்கு சொந்தமானது. 24.10.2015 அன்று விஷ்ணு மகாலில் திருணம் ஏற்பாடாகி இருந்தது. வண்டி எண் கவனமில்லை. அது இண்டிகா கார் சில்வர் கலர். அ.சா.1 ன் மகள் லாவண்யாவை காரில் தூக்கிக்கொண்டு போனார்கள். அந்த காரை சிவாக்குமார் முன்பாகவே பின் தொடாந்து போனார். அதன் பிறகு நாங்கள் போனோம். மணிகண்டன் மூலமாக இரத்தினகிரியில் சிவக்குமாரை காரில் இருந்து தள்ளிவிட்டதாகவும் அவரை தூக்கி கொண்டு ஆம்புலன்சில் ஏற்றி வாலாஜா மருத்துவமனைக்கு போனதாகவும், வாலாஜா மருத்துவமனையில் சிவக்குமாரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET

**Sc No. 51/2018**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | P.W.6 |
| Name | : | பிரபு |
| Father's / Husband's Name | : | சத்தியன் |
| Age | : | 25 |
| Religion | : | இந்து |
| Calling | : | குவாலிடி இன்ஜினியர் |
| Caste | : | BC |
| Village | : | வாலாஜா |
| Date | : | 02.12.2019 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது வாலாஜாவில் குடியிருந்து வருகிறேன். 4 வருடத்திற்கு முன்பு 24.10.2015 அன்று நான் வாலாஜாவில் உள்ள மெட்ராஸ் பேருந்து நிறத்ததில் வந்திருந்தேன். அப்போது ஒரு நபர் கார் மீது ஜம்ப் செய்து பேணட்டை பிடித்தக்கொண்ட தொங்கிக்கொண்டு சென்னை நோக்கி சென்றுக்கொண்டிருந்ததை பார்த்தேன். விசாரித்துப்பார்த்தப்போது ஆறுமுகம் என்பவரின் தம்பி என தெரிந்துக்கொண்டேன். அந்த காரின் எண். கே.ஏ.1734 இண்டிகா கார் என்று என்று தெரிந்துக்கொண்டேன். அந்த காரில் இருந்தவர்களை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியாது. ஆஜர் எதிரிகளை இதற்கு முன்பாக நான் பார்த்ததில்லை. வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

இல்லை